2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கூறியவாறு, தக்க நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் சித்தேரி என்ற மலைக் கிராமம் உள்ளது. அந்த ஊராட்சி கிட்டத்தட்ட 62 கிராமங்களை உள்ளடக்கியதாகும். சித்தேரி மட்டுமல்லாமல், அங்கே வத்தல் மலையும் மலைக் கிராமமாக உள்ளது. அந்தப் பகுதிக்கு ஏதாவது பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால்கூட கழுதைமீது பொருட்களை ஏற்றி எடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அந்தப் பகுதியில் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீலகிரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தில் சேர்த்ததுபோல, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தையும் சேர்த்து, அந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் அல்ல; தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளை இந்த மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியவாறு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

104—

கட்டட வசதி

•9860—திரு. ஏ.எஸ். கண்ணன்:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 27

(அ) பொன்னேரி தலைமையிடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தை இரண்டாகப் பிரித்த பிறகு, திருவள்ளூர் மாவட்டம் என்று திருவள்ளூரைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கிவரும் அந்தப் பகுதியில் பொன்னேரி பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், வருவாய்த் துறை அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், பொது மருத்துவமனை என அத்தனையும் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் நிறைந்த அந்தப் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு இதுவரையிலும் ஒரு புதிய கட்டடம் இல்லாமல் பழைய கட்டடத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே, பொருளாதார நெருக்கடி இருப்பினும், இல்லை என்கிற பதிலை மாற்றி, கட்டடம் கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்து, பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பாரா என்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் அவசியத்தை உணர்ந்துதான் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட, உலகநாத நாராயணசாமி அரசு கலைக் கல்லூரிக்குச் சொந்தமான 2.25 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் அந்த நிலம், கல்வித் துறை விரிவாக்கத்திற்குத் தேவைப்படும் என்று கல்வித் துறை தெரிவித்ததால், வேறு நிலம் தேர்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது வேறோர் இடத்தைத் தேர்ந்தெடுத்ததில், அந்த நிலமும் கல்வித் துறையைச் சேர்ந்தது என்று தெரிவதால், அந்த நிலத்தை நீதித் துறைக்கு மாற்ற, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.எஸ். கண்ணன்.

2003 மார்ச் 27]

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தைப் பொறுத்தவரையிலும், அந்தப் பகுதியிலே நிறைய நிலம் இருக்கிறது. அதில் பிரச்சினை எழுமானால், நிச்சயம் அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, அமைச்சரவர்கள் கூறுகின்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகுந்த ஒத்துழைப்பைத் தருவதாகச் சொன்னார்கள். அவர்கள் பொன்னேரி வட்டத்திலே வேறு ஏதாவது ஒரு நிலத்தை, அரசு நிலத்தைக் காட்டினால்கூட, அந்த நிலத்திலே கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 105, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

105—

கும்பாபிஷேகம்

***18999—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியத்திலுள்ள திருவற்றிபுரம் ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து, கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு நிதி மற்றும் பொது மக்கள் நன்கொடை ஆகியவை மூலம் திருக்குடமுழுக்குச் செய்திட ஆரம்ப கட்ட நடவடிக்கை செயல்